இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 192 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 10 – வியாழக்கிழமை 22 பிப்ரவரி 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 192 : Thiruvalluvar Year - 2055 - Maasi 10 - Thursday 22 February 2024 - Chennai 16 Pages ₹ 5.00


## உலகெங்கும் வாழும் தமிழர்களை இணைக்கும் பேரோற்றல் கொண்ட ஒற்றை அடையாளம் தமிழ் !

# அன்னைத் தமிழை எந்நாளும் காத்து வளர்த்திட உறுதியேற்றோம்!

## உலகத் தாய்மொழி நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் நேற்று (21.2.2024) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், உலகத் தாய்மொழி நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரால் உலக தாய்மொழி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

சென்னை, பிப். 22 -

**உலகத் தாய்மொழி நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், “உலகெங்கும் வாழும் தமிழர்களை இணைக்கும் பேராற்றல் கொண்ட ஒற்றை அடையாளம் தமிழ்!” என்றும் “அன்னைத் தமிழை எந்நாளும் காத்து வளர்த்திட தமிழ்நாடு சட்டப்பேரவையில் அனைத்து உறுப்பினர்களும் உறுதியேற்றோம்” எனவும் குறிப்பிட்டுள்ளார்.**

சட்டப்பேரவையில் நேற்று உலகத் தாய்மொழித் தினத்தை முன்னிட்டு பேரவைத் தலைவர் அவர்கள், தாய்மொழி உறுதிமொழியை படித்திட அவற்றினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அமைச்சர்கள், உறுப்பினர்கள் திரும்பக் கூறி உலகத் தாய்மொழி உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

பேரவையில் எடுத்துக்கொள்ளப் பட்ட உறுதிமொழி வருமாறு:-

**“எங்கும் தமிழ் எதிலும் தமிழ் எப்போதும் தமிழ் என்ற நடைமுறையை கொண்டுவரப் பாடுபடுவோம்.**

**தேமதுரத் தமிழோசை உலகெங்கும் ஒலிக்க எந்நாளும் உழைத்திடுவோம்.**

**அனைத்து ஆவணங்களிலும் தமிழிலேயே கையொப்பமிடுவோம்.**

**குழந்தைகளுக்குத் தமிழ்மொழியில் பெயர் சூட்டப் பரப்புரை செய்திடுவோம். இணையற்ற தமிழுடன் இணையத் தமிழையும் காத்து வளர்ப்போம் என்று உலகத் தாய்மொழி நாளான இன்று உளமார உறுதி கூறுகிறேன்”** என்று பேரவைத் தலைவர் உறுதிமொழியை படித்திட அதனை முதல்வர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் அனைவரும் திரும்பக் கூறி உறுதிமொழி ஏற்றனர்.

இந்நிலையில் உலகத் தாய்மொழி நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**அனைத்து வேறுபாடுகளையும் அறுத்தெறிந்து உலகெங்கும் வாழும் தமிழர்களை இணைக்கும் பேராற்றல் கொண்ட ஒற்றை அடையாளம் தமிழ்!**

**“தாழ்ந்திடு நிலையினில் உனை விடுப்பேனோ?**

**தமிழன்எந் நாளும் தலைகுனிவேனோ?”**

**எனப் பாவேந்தர் பாடியபடி தாய்த் தமிழ் காக்கும் மரபில் வந்தவர்கள் நாம்.**

**பெயர்சூட்டலில், மேடைச் சொற்பொழிவுகளில், திரைப்பட உரையாடல்களில், அரசு ஆவணங்களில் என எல்லாத் தளங்களிலும் தமிழினைப் பிறமொழி ஆதிக்கத்தினின்று மீட்டு அதன் பழம்பெருமையை நிலைநாட்டிய வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் நாம்!**

**அத்தகைய இயக்கத்தின் வழி வந்த நமது அரசின் சார்பில், உலகத் தாய்மொழி நாளான இன்று, தமிழ்நாடு சட்டப்பேரவையில் அன்னைத்தமிழை எந்நாளும் காத்து வளர்த்திட அனைத்து உறுப்பினர்களும் உறுதியேற்றோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

### சம்பு எல்லையில் விவசாயிகள் மீது தடியடி – கண்ணீர்புகை குண்டுவீச்சு!

# டெல்லி முற்றுகைப் போராட்டத்திற்கு புறப்பட்ட விவசாயிகள் மீது தாக்குதல்!

## தடியடியையும் மீறி விவசாயிகள் போராட்டம் – முழக்கம்!

புதுடெல்லி, பிப். 22 –

டெல்லி முற்றுகைப் போராட்டத்திற்கு புறப்பட்ட விவசாயிகள் மீது சம்பு எல்லையில் அரியானா மாநில போலீசார் தடியடி நடத்தியும் கண்ணீர்புகை குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தியதால் அங்கு பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

விவசாயிகளின் கோரிக்கைகள் தொடர்பாக அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்த நிலையில் புதன்கிழமை டெல்லி முற்றுகை போராட்டம் நடத்தப்படும் என விவசாயிகள் அறிவித்திருந்தனர்.

அதன்படி டெல்லி எல்லைகளிலும் அரியானா மாநில எல்லையிலும் தடுத்து நிறுத்தி வைக்கப் பட்டிருந்த விவசாயிகள் நேற்று காலை டெல்லி நோக்கிச்செல்லும் போராட்டத்தை தொடங்கினர்.

சாலைகளில் காவல்துறையினர் ஏற்படுத்தியுள்ள கான்கிரீட் தடுப்புச்சுவர்களையும் முள்வேலிகளையும் அகற்றுவதற்கான ராட்சத வாகனங்களுடன் புறப்பட்டுச்சென்ற விவசாயிகளை காவல்துறையினர் ஆங்காங்கே தடுத்து நிறுத்தியதால் பல இடங்களில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

சம்பு எல்லையில் தடுத்து நிறுத்தப்பட்டிருந்த விவசாயிகள் டெல்லி நோக்கி புறப்பட்ட உடனேயே அரியானா மாநில காவல்துறையினர் அவர்கள் மீது தடியடி நடத்தினர்.

மேலும் ட்ரோன் மூலம் கண்ணீர்புகை குண்டுவீச்சு தாக்குதலையும் நடத்தினர்.

விவசாயிகள் மீது காவல்துறை நடத்திய தாக்குதலால் சம்பு எல்லையில் பதற்றமும் பரபரப்பும் நிலவுகிறது. இதனிடையே பேச்சுவார்த்தை நடத்த வருமாறு விவசாயிகளுக்கு ஒன்றிய அரசு மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது.

---

### கோயம்பேட்டில் இருந்து

# திருமங்கலம் - முகப்பேர் வழியாக ஆவடி வரையில் மெட்ரோ ரயில்!

## விரிவான திட்ட அறிக்கை!

சென்னை, பிப். 22 -

சென்னையில் இரண்டாவது கட்ட மெட்ரோ ரெயில் பணிகள் 3 வழித்தடங்களில் செயல்படுத்தப்படுகின்றன. 119 கி.மீ. நீளத்திற்கு நடக்கும் இந்த பணிகள் 2028ம் ஆண்டுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சிறுசேரி - கிளாம்பாக்கம், பூவிருந்தவல்லி - பரந்தூர், கோயம்பேடு - ஆவடி ஆகிய பகுதிகளுக்கு மெட்ரோ ரெயில் சேவையை நீட்டிப்பது குறித்து சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்யப் பட்டது.



அதனைத் தொடர்ந்து, கோயம்பேடு - ஆவடி வரை மெட்ரோ ரயில் வழித்தடம் மற்றும் சிறுசேரி - கிளாம்பாக்கம் வரை மெட்ரோ ரயில் நீட்டிப்புக்கான சாத்தியக் கூறு அறிக்கைகள், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் மெட்ரோ ரயில் நிறுவனம் தமிழ்நாடு அரசிடம் சமர்ப்பித்தது.

இந்நிலையில், கோயம்பேடு - ஆவடி மெட்ரோ சேவைக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் டெண்டர் கோரி உள்ளது.

அதன்படி, வழித்தடம் 5ல் கோயம்பேட்டில் இருந்து திருமங்கலம் - முகப்பேர் வழியாக ஆவடி வரை 16 புள்ளி பூஜ்ஜியம் ஏழு கிலோ மீட்டர் தூரத்திற்கு வழித்தடத்தை நீட்டிப்பது குறித்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப் பட உள்ளதாக மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

மேலும் சென்னை பூவிருந்தவல்லி முதல் பரந்தூர் வரை 50 கி.மீ தூரத்திற்கு மெட்ரோ ரயில் இயக்குவது தொடர்பாக திட்ட அறிக்கை தயாரிக்கவும் டெண்டர் கோரப்பட்டுள்ளது.

பூவிருந்தவல்லியிலிருந்து திருமழிசை வழியாக பரந்தூர் வரை மெட்ரோ ரயில் இயக்க சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் விரிவான திட்ட அறிக்கை கோரியுள்ளது.

---

# ஸ்டெர்லைட் ஆலையை திறக்க ஒருபோதும் அனுமதிக்க முடியாது!

## உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு மீண்டும் திட்டவட்டம்!

புதுடெல்லி, பிப். 22 -

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை திறக்க ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் மீண்டும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை வழக்கு தலைமை நீதிபதி அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, தமிழ்நாடு அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சி.எஸ். வைத்தியநாதன், ஆலை நிர்வாகம் கூறும் தகவல்கள் தவறானவை என்றும்,

அரசு விதிக்கும் அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற தயாராக இருப்பதாக இப்போதுதான் கூறுகின்றனர் என்றும் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு மற்றும் மாசுகட்டுப்பாட்டு வாரியத்தால் வகுக்கப்பட்ட விதிமுறைகளை ஸ்டெர்லைட் ஆலை மீறியுள்ளது என்றும் குற்றம்சாட்டினார்.

இதற்காக ஏற்கனவே ஸ்டெர்லைட் ஆலைக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். ஆலை விவகாரத்தில் முடிவெடுக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில்தான் ஆலையை அரசு மூடியுள்ளது என்று தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் தமிழ்நாடு அரசின் ஆட்சேபனைகள், ஐயப்பாடுகளை புறம்தள்ளி விட முடியாது என தெரிவித்த நீதிபதிகள், அப்பகுதி மக்களின் நிலையையும், அவர்களின் கருத்துக்களையும் ஒதுக்கிவிட முடியாது என்று கூறினர்.



ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்பு விவகாரத்தில் அப்பகுதியைச் சார்ந்த அனைத்து மக்களும் நீதிமன்றம் வர இயலாது என தெரிவித்த நீதிபதிகள், குரலற்றவர்களின் நலனையும் பாதுகாக்க வேண்டியது நீதிமன்றத்தின் கடமையாகும் என்று கூறினர்.

சுற்றுச்சூழல் பாதிப்பு விவகாரத்தை புறக்கணிக்க இயலாது என்றும் குறிப்பிட்டனர்.

“Red Category” என்று வகைப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த அனைத்து அம்சங்களையும் நிச்சயம் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

பொதுமக்கள் நலன் முக்கியமானது எனக் கூறிய நீதிபதிகள், தற்போதைய நிலையில் ஆலையை திறக்க அனுமதிக்க இயலாது என்று திட்டவட்டமாக தெரிவித்தனர்.